சார்பு நீதிமன்றம், சிவகாசி

OS.No.45/2025

PW1

பெயர்–ரெங்கலட்சமி

நாள்– 10.08.2026

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கபட்டார்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

4. நான் என்ன படித்துள்ளேன் என்றால் D.Pharm., படித்துள்ளேன். திருமணமாகி எனக்கு எத்தனை ஆண்டுகள் ஆகிறது என்றால், 5 வருடங்கள் முடிந்து 6 வது வருடம் நடக்கிறது. எனது கணவர் திருமண சமயத்தில் என்ன வேலை பார்த்தார் என்றால் ஆக்டிங் டிரைவர் வேலை பார்த்தார். ஆக்டிங் டிரைவராக மாதம் எவ்வளவு சம்பளம் வந்தது என்றால் ரூ.25,000/– வரும். ஆக்டிங் டிரைவர் என்பது என்ன பணி என்றால் வண்டி ஓட்டிச் செல்வதற்கு தேவைப்படுகிறார்கள் அழைக்கும்போது வண்டி ஓட்ட செல்வதாகும். ஆக்டிங் டிரைவர் பணி தொடர்ந்து இருக்காது என்றால் சரியல்ல, எப்போதும் வேலை இருந்து கொண்டிருக்கும்.

5. ஆக்டிங் டிரைவருக்கு மாதம் ரூ.25,000/– வருமானம் வராது என்றும், நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. திருமணம் முடிந்து கூட்டுக்குடும்பமாக எவ்வளவு நாட்கள் வாழ்ந்தோம் என்றால் எனது கணவர் இருக்கும்வரை கூட்டுக்குடும்பமாக வாழ்ந்தோம். எனது கணவர் இருந்தபோது மாதம் வருமானத்தை என்னிடம் கொடுத்தார் என்றும், நான்தான் வீட்டுச்செலவை கவனித்தேன் என்றால் சரியல்ல, எனது மாமனாரிடம் தான் கொடுப்பார். எனது கணவர் எப்போது இறந்தார் என்றால் 6.10.2023 ல் விபத்தில் இறந்தார். எனது கணவர் விபத்தில் இறந்ததற்கான இழப்பீடு வழக்கு மதுரையில் மோட்டார் வாகன இழப்பீடு தீர்ப்பாயத்தில் நடந்து வருகிறது என்றால் சரிதான்.

SUMITHA P

Digitally signed by SUMITHA P
Date: 2026.08.10 16:26:02 +0530

6. எனது கணவர் இறந்தபிறகு மாமனாரிடம் நான் சண்டை போட்டு தனிக்குடுத்தனம் சென்று விட்டேன் என்றால் சரியல்ல, நான் சண்டை போடவில்லை, மாமனார் என்னை வெளியே போகுமாறு சொன்னதால் எனது பெற்றோர் வீட்டிற்கு வந்துவிட்டேன். எனது பெற்றோர் வீட்டில் வசிக்கிறேனா அல்லது தனியாக வசித்து வருகிறேனா என்றால் எனது பெற்றோருடன் வசித்து வருகிறேன். வா.சா.ஆ. 10 முதல் 12 கிரைய ஆவணங்களிலுள்ள சொத்துக்கள் எனது மாமனாருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். எனது மாமனார் சுயசம்பாத்தியத்தில் வாங்கிய சொத்துக்கள் என்றால் சரியல்ல, எனது கணவரின் உழைப்பும் உள்ளது. அந்தச் சொத்துக்கள் எந்த வருடம் வாங்கியது என்றால் 1998 லும், 2004 லும் வாங்கியவையாகும்.

7. எந்த வருடம் வீடு கட்டப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. எனது திருமணத்திற்கு முன்பே கட்டிவிட்டார்கள். 2004 ல் சொத்து வாங்கிய 2 வருடத்தில் வீடு கட்டிவிட்டார்கள் என்றால், அது எனக்கு தெரியாது. எனது கணவர் எப்போது பிறந்தார் என்றால் 7.3.1991 ல் பிறந்தார். வீடு கட்டும்போது எனது கணவருக்கு என்ன வயது இருக்கும் என்றால் தோராயமாக 15 முதல் 16 வயது இருக்கலாம் . 15 வயதே ஆகிய எனது கணவரின் பங்களிப்பும் உள்ளதென நான் சொல்வது பொய்யானது என்றால் சரியல்ல, அவரது உடல் உழைப்பும் உள்ளது.

8. வா.சா.ஆ.10 முதல் 12 உள்ள சொத்துக்கள் எனது மாமனாரின் சுய சம்பாத்திய சொத்துக்கள் என்பதால் அவர் யாருக்கும் அடமானம் வைக்கவோ, தானம் கொடுக்கவோ அவருக்கு முழுஉரிமை உண்டு என்றால் சரியல்ல. நான் மேற்படி சொத்துக்களை பொறுத்து ஜீவனாம்சம் கேட்பது சட்டப்படி தவறானது என்றால் சரியல்ல. நான் என்ன வேலை பார்க்கிறேன் என்றால் பஞ்சாயத்து அலுவலகத்தில் தற்காலிகமாக Data entry operator ஆக வேலை செய்கிறேன், மாத சம்பளம் எவ்வளவு என்றால் ரூ.4,500/-ஆகும். எனது மகள் என்ன படிக்கிறார் என்றால் KMKA தனியார் பள்ளியில் U.K.G படிக்கிறார். எனது மகளின் வயது தற்போது 5 ஆகும். எனது மகளின் பள்ளிக்கட்டணம் ஆண்டு ஒன்றிற்கு

SUMITHA P
Digitally signed by SUMITHA P
Date: 2026.08.10 16:26:07 +0530

எவ்வளவு ஆகிறது என்றால் ரூ. 20,000/- முதல் 25,000/- வரும். எனது செலவில்தான் படிக்க வைக்கிறேன் என்றால் , எனது பெற்றோரும் உதவி செய்கிறார்கள். என்னை பராமரிக்கவும், குழந்தையின் பராமரிப்பு, படிப்பு செலவு ஆகியவற்றிற்கு போதுமான வசதி வாய்ப்பு எனக்கு உள்ளது என்றால் இல்லை. நான் D.Pharm., படித்துள்ளதால் மருந்துக்கடை வைப்பதற்கு லைசென்ஸ் உள்ளதா என்றால் முன்பு இருந்தது, எனது கணவர் இறந்த பிறகு லைசென்ஸ் ரத்தாகிவிட்டது. தற்போது லைசென்ஸ் இல்லை. எனக்கு அந்த லைசென்ஸ் உள்ளது என்றும், எனது பெயரில் மருந்துக்கடை நடத்தி வருகிறேன் என்றும், வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

9. எனது மகளை பிரதிவாதி பார்க்க நான் அனுமதிக்கவில்லை என்றால் சரியல்ல, பார்க்கவிடுவேன். எனது மகளை பிரதிவாதி பார்த்து 2 வருடங்கள் ஆகிவிட்டது என்றால் சரியல்ல, நீதிமன்றத்திற்கு எனது மகளை அழைத்து வந்த போதும் அவர் பார்க்கவில்லை. நான் பிரதிவாதியிடம் கேட்ட ஜீவனாம்சம் சட்டப்படி வழங்கக்கூடியதல்ல என்றும், தபசில் சொத்துக்கள் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்துக்கள் என்பதால் அதைப்பொறுத்து நான் பரிகாரம் பெற முடியாது என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி தொழில் பார்த்தும் வருமானம் ஈட்டி வருகிறார். எனக்கு போதிய வசதி, வாய்ப்பு உள்ளதால் எனக்கு பரிகாரம் கிடைக்ககூடியதல்ல என்றால் சரியல்ல, எனது பெற்றோர் பட்டாசு கம்பெனியில் கூலி வேலைக்குதான் செல்கிறார்கள், அவர்கள் கடன் வாங்கிதான் எனது மகளுக்கு பள்ளிகட்டணத்தை செலுத்தியுள்ளனர். நான் கடன் வாங்கி பள்ளிகட்டணம் செலுத்தியதாக நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் எந்த கடனும் வாங்கவில்லை என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

SUMITHA P

Digitally signed by SUMITHA P
Date: 2026.08.10 16:26:12 +0530

**மறுவிசாரணை – இல்லை.**

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குபடித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

SUMITHA P

Digitally signed by SUMITHA P
Date: 2026.08.10 16:26:18 +0530

சார்பு நீதிபதி,
சிவகாசி.